ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது
අංක 2003/37 - 2017 ජනවාරි 27 වැනි සිකුරාදා - 2017.01.27
*2003/37 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி அமைச்சர் ஜோன் என்தனீ எம்மானுவெல் அமரதுங்க ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், அக்குறனை பிரதேச செயலாளர் பிரிவில், உடகம்பஹ கோரளை சிறு பிரிவில், திப்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை நாயகத்தினால் 2015.12.16 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட முதற் சுவட்டு இல. மஹ/ஏகேஆர்/2015/449 இல் காட்டப்பட்டுள்ள சுமார் 0.0632 ஹெக்டயார் விஸ்தீரண முடைய "சைஸ்டன் சீட் டிவிஷன் எஸ்டேட்" எனும் காணித்துண்டின் எல்லைகள் :

*01.* **துண்டு 'ஏ' - சைஸ்டன் சீட் டிவிஷன் எஸ்டேட் - விஸ்தீரணம்: சுமார் 0.0632 ஹெக்டயார்**

வடக்கு : எம். எம். கே. சதுரங்க பண்டார உரிமை கோரும் சைஸ்டன் சீட் டிவிஷன் எஸ்டேட் மற்றும் எஸ். எம். எஸ். நூருல் அஸ்மியா உரிமை கோரும் சைஸ்டன் சீட் டிவிஷன் எஸ்டேட் ; கிழக்கு : எஸ். எம். எஸ். நூருல் அஸ்மியா உரிமை கோரும் சைஸ்டன் சீட் டிவிஷன் எஸ்டேட் ; தெற்கு: எஸ். எம். எஸ். நூருல் அஸ்மியா உரிமை கோரும் சைஸ்டன் சீட் டிவிஷன் எஸ்டேட் மற்றும் பாதை (பிரதேச சபை) ; மேற்கு: பாதை (பிரதேச சபை) மற்றும் எம். எம். கே. சதுரங்க பண்டார உரிமை கோரும் சைஸ்டன் சீட் டிவிஷன் எஸ்டேட்.

ஜோன் ஏ.ஈ.அமரதுங்க,
காணி அமைச்சர்.

எனது இல. : 4/3/9/2015/டபிள்யூஎஸ்/115.
காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2016.07.07.

02 - 535